முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

# 51 - நாடகமும் அரங்கியலும்

## புள்ளியிடும் திட்டம்







இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# 51 – நாடகமும் அரங்கியலும்

## புள்ளியிடும் திட்டம்

## நாடகமும் அரங்கியலும் பாடநெறியானது

வினாப்பத்திரம் I, வினாப்பத்திரம் II என இரு பத்திரங்களை உள்ளடக்கியது. பகுதி I இல் 40 வினாக்களையும் பகுதி II இல் 07 வினாக்களையும் கொண்டுள்ளது.

பகுதி I இன் 40 வினாக்களும் கட்டாய வினாக்களாகும். சரியான விடையை இனம் கண்டு விடைத்தாளில் இதற்குரிய கூட்டில் புள்ளடி இடுதலாகும்.

வினாப்பத்திரம் I

பகுதி – I 40 வினாக்களுக்கு 40 x 1 = 40 புள்ளிகள்

பகுதி – II 07 வினாக்களையுடையது.

இவ் வினாத்தாளில் 07 வினாக்களில் முதலாம் வினா கட்டாயமானது. ஏனையவற்றுள் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

05 x 12 = 60 புள்ளிகள்

வினாப்பத்திரம் I, II

பகுதி - I 40 புள்ளிகள்

பகுதி - II 60 புள்ளிகள்

# ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

විෂය අංකය / பாட இலக்கம்: **51**

විෂයය / பாடம்: **நாடகமும் அரங்கியலும்**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 1 | 21. | 4 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 4 | 22. | 2 | 32. | 3 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 3 | 33. | 1 |
| 04. | 1 | 14. | 3 | 24. | 1 | 34. | 3 |
| 05. | 3 | 15. | 4 | 25. | 4 | 35. | 4 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 2 | 36. | 3 |
| 07. | 4 | 17. | 1 | 27. | 3 | 37. | 2 |
| 08. | 3 | 18. | 3 | 28. | 2 | 38. | 4 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 1 | 39. | 1 |
| 10. | 3 | 20. | 2 | 30. | 4 | 40. | 3 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) கேட்பதன் அடியாக மனம் அரங்காகச் செயற்படும் நாடகவகை எது? (01 புள்ளி)

(ii) ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நிகழ்த்தப்பெறும் ஆற்றுகைப் பண்பு கொண்ட சடங்கு எது? (01 புள்ளி)

(iii) சொக்கரி ஆற்றுகை செய்யப்படும் அரங்கவெளி எவ்வாறழைக்கப்படும்? (01 புள்ளி)

(iv) அசைவுகளில் ஆக்கியல் அசைவு என்றால் என்ன? (01 புள்ளி)

(v) மேடை வெளியில் பாத்திரம் ஒன்றின் குறித்த உணர்ச்சியைச் சுட்டிக்காட்டும் ஒளிவிளக்கு எது? (01 புள்ளி)

(vi) 'தொன்று திகழ்ந்திடு இன்று இலங்கிடு...' எனும் நாடகப் பாடல் இடம்பெறும் நாடகம் எது? (01 புள்ளி)

(vii) 'வடபாங்கு' ஆற்றுகையில் காப்புப்பாடல் பாடப்படும் பாவினம் எது? (01 புள்ளி)

(viii) 'ஏகலைவன்' எனும் நாடகத்தை எழுதியவர் யார்? (01 புள்ளி)

(ix) நாடகப் பாத்திரம் ஒன்றின் உளவியற் பண்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(x) நா. சுந்தரலிங்கம் எழுதிய நாடகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

i. வானொலி நாடகம் **(01 புள்ளி)**

ii. வேட்டைத்திருவிழா **(01 புள்ளி)**

iii. களத்து மேடு **(01 புள்ளி)**

iv. படைப்பாளி தனது கற்பனையின் ஊடாக வடிவம் கொடுக்கின்ற அசைவுகள் **(01 புள்ளி)**

v. பொட்டொளி / புள்ளிக்குவியமுடைய விளக்கு **(01 புள்ளி)**

vi. பூதத்தம்பி **(01 புள்ளி)**

vii. வெண்பா **(01 புள்ளி)**

viii. இளைய பத்மநாதன் **(01 புள்ளி)**

ix. விருப்பு, வெறுப்புகள், நடத்தைக்கோலங்கள், மனப்பாங்கு, உணர்ச்சி வெளிப்பாடுகள் போன்ற பொருத்தமான உளவியல் பண்புகளில் இரண்டை குறிப்பிட்டிருந்தால் இரண்டு புள்ளிகள் வழங்கலாம்.

**(02 புள்ளிகள்)**

**(02 புள்ளிகள்)**

x. விழிப்பு, அபசுரம், பம்மாத்து

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

**2.** (i) நாடகத்தின் மூலக்கூறுகள் மூன்றினைப் பட்டியற்படுத்துக.

- நடிகன்
- பார்ப்போர்
- அரங்கவெளி
- இசை
- காண்பியங்கள்
- வேடஉடை
- ஒப்பனைகள்
- நடிப்பு
- வார்த்தைகள்
- மட்டங்கள்

**இவை போன்ற பொருத்தமான 03 விடைகள் தரப்படுமிடத்து 03 புள்ளிகள் வழங்கலாம்.**

**(03 புள்ளிகள்)**

(ii) நாடகம் ஒன்றின் தனித்துவமானதும் சிறப்பானதுமான இயல்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

- கூட்டுக்கலை
- கணப்பிரசன்னக்கலை
- நால்வகைச் சித்திரிப்புகள் வழியாகச் சித்திரிக்கப்படும் கலை
- ஆற்றுகைக்கலை
- கட்புல செவிப்புலக்கலை
- போலச்செய்தலை அடிப்படையாகக் கொண்ட கலை
- மனிதனை செய்கைநிலையில் சித்திரிப்பது
- மனிதனை மோதுகைநிலையில் சித்திரிப்பது
- தாக்க மறுதாக்கக் கலை

**(இவை போன்ற பொருத்தமான நான்கு விடைகள் தரப்பட்டிருப்பின் நான்கு புள்ளிகள் வழங்கலாம்)**

**(04 புள்ளிகள்)**

(iii) 'நாடகம் ஒன்றைத் தயாரிக்கும்போது தயாரிப்பாளர் பணியும் முக்கியமானது' என்ற தொனிப்பொருளில் ஐந்து விடயங்களுக்குக் குறையாது கட்டுரை ஒன்றினை வரைக.

- நாடகத் தயாரிப்பினைத் திட்டமிடுதல்
- நாடக எழுத்துருவைத் தெரிவுசெய்தல்
- நெறியாளரைத் தெரிவு செய்தல்
- நிதிக் கையாளுகை
- நுழைவுச்சீட்டுக்கள் வழங்குதல்
- ஏனைய கலைஞர்களைத் தெரிவு செய்தல்
- நடிகரை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல்

**நாடகத் தயாரிப்புத் தொடர்பான அறிமுகத்துடன் நாடகத்தயாரிப்பாளரின் கீழ்வரும் பணிகளில் ஐந்தினை உள்ளடக்கி கட்டுரை வரைந்திருப்பின் ஐந்து புள்ளிகள் வழங்கலாம்**

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

3. (i) அரங்க விளையாட்டு என்றால் என்ன?

மகிழ்வளிப்பை ஏற்படுத்தி நடிகரின் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியைத் தூண்டுவதுடன் உடல், குரல், உளப்பயிற்சியாகவும் நடிப்பிற்குத் தயார்ப்படுத்துவதாகவும் அமையும் விளையாட்டுக்கள் அரங்க விளையாட்டுக்கள் ஆகும்.

**(03 புள்ளிகள்)**

(ii) அரங்க விளையாட்டுக்கள் ஆறின் பெயர்களைத் தருக.

- ஆடும் வீடும்
- நண்டு இறால் மீன்
- தலைவரைக் கண்டுபிடித்தல்
- கரடியும் கிராம மக்களும்
- கந்தையாண்ணை சொல்கிறார்
- குருட்டு ஓட்டோ

**(இவை போன்ற தொடர்புபட்ட அரங்க விளையாட்டுக்கள் ஆறின் பெயர் குறிப்பிட்டிருப்பின் 03 புள்ளிகள் வழங்கலாம்)**

**(03 புள்ளிகள்)**

(iii) 'நடிகரின் நடிப்பாற்றலை விருத்தி செய்வதற்கு அரங்க விளையாட்டுக்கள் துணை நிற்கின்றன' இக்கூற்றினை விளக்குக.

அரங்க விளையாட்டுக்கள் நடிகரின் உடல், குரல், மனம் சார்ந்த பயிற்சியாக அமைவதுடன் கற்பனைத்திறன், மனதை ஒருநிலைப்படுத்தல் திறன் / மனனம் செய்யும் திறன், தலைமைத்துவப்பண்பு, தொடர்பாடல் திறன், தீர்மானம் எடுக்கும் திறன், படைப்பாக்கத்திறன் போன்ற திறன்களையும் வளர்த்தெடுப்பதன் மூலம் நடிகரின் உடல், குரல், மனத்தடைகளை நீக்கி நடிகருக்கு வழங்கப்படும் பாத்திரத்தினைப் புரிந்துகொண்டு அதன் இயல்புகதைத் தனக்குள் உள்வாங்கி தனது சித்திரிப்பினைச் சிறப்பாக வெளிப்படுத்துவதற்குத் துணை நிற்கின்றன

**(இவை போன்ற பொருத்தமான விடை எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்)**

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

**4.** 'துணைக்கலைகள் நாடகத்தை மெருகூட்டப் பயன்படுகின்றன'

(i) ஒப்பனை என்றால் என்னவென்பதை எடுத்துக்கூறி, நாடகத்தில் ஒப்பனையின் பயன்பாடுகள் மூன்றினைத் தருக.

நடிகரின் பலவீனமான அம்சங்களை மறைத்து பாத்திரத்திற்குப் பொருத்தப்பாடான அம்சங்களை உள்வாங்கி நடிகரைப் பாத்திரமாக மெருகூட்டும் செயற்பாடே ஒப்பனையாகும். பூசுதல், அணிதல், ஒட்டுதல், வரைதல் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் ஒப்பனைக்குள் அடங்கும். **(01 புள்ளி)**

**இதன் பயன்பாடுகளாக**

- பாத்திரத்தின் பௌதீகப் பண்பை வெளிப்படுத்தும்
- பாத்திர உணர்வு நிலைகளை வெளிப்படுத்தும்
- பாத்திரத்தின் பௌதீக, சமூக, உளவியல் பண்புகளை வெளிப்படுத்தும்
- நாடக மோடியை வெளிப்படுத்தும்
- நடிகரின் முகத்தை பிரகாசமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தும்
- அரங்கின் அழகியல் பண்பை வெளிப்படுத்தும்

**(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(ii) நாடகமொன்றில் அசைவியக்க வடிவாக்கம் செய்யும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

லயம், காலம், மேடையின் பௌதீகத்தளம், அதன் சமநிலை, மோடி, செயலியக்கம், காண்பியங்கள் மற்றும் பின்னணி ஒளியூட்டல் ஆற்றுகை நகர்வில் வலிந்து செருகப்பெறாத இயல்பான இணைவு காணப்பெறல்.

**(இவை போன்ற பொருத்தமுடைய விடயங்கள் எதிர்பார்க்கப் பெறுகின்றன)**

**(04 புள்ளிகள்)**

(iii) 'நாடகமொன்றில் இசையின் நோக்கங்கள்' என்ற தலைப்பிற்கேற்றவாறு நான்கு முன்வைக்குக.

- நாடகத்தின் கருவை வெளிப்படுத்தும்.
- மனநிலையை வெளிப்படுத்தும்.
- பண்பாட்டின் அடித்தளமாக நின்று நிகழ்வுக்கான கனதியைத் தோற்றுவிக்கும்.
- சொல்லாடல்களுக்கு அழுத்தம் கொடுக்கும்.
- அசைவுகள், செயல்கள் என்பவற்றை அழுத்திக் காட்டும்.
- சூழல், களத்தை நிலைநிறுத்தும்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

**5.** பின்வரும் அரங்கவியலாளர்கள் ஈழத்தமிழ் அரங்கிற்கு ஆற்றிவரும் பணிகள் பற்றி விளக்குக.

(i) சி. மௌனகுரு

- பேராசிரியர் சு.வித்தியானந்தனின் கூத்துக்களில் நடித்துப் பின்னர் அம்மரபிலேயே சமகாலப் பிரச்சினைகளைப் பேசமுற்பட்டவர்.
உதாரணம்: சங்காரம், சக்திபிறக்குது, நம்மைப்பிடித்த பிசாசுகள், சரிபாதி.
- பேராசிரியர் வித்தியானந்தனைத் தொடர்ந்து இராவணேசன் எனும் நாடகத்தைப் பல்வேறு கருப்பொருள் வெளிப்பட பல தடவைகள் தயாரித்தவர்.
- வேடனை உச்சிய வெள்ளைப்புறாக்கள், தப்பிவந்த தாடியாடு ஆகிய சிறுவர் நாடகங்கள் மூலம் சிறந்த சிறுவர் நாடக ஆசிரியராகவும் இனங்காணப்பட்டவர்.
- பழையதும் புதியதும், அரங்கியல், மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், ஈழத்துத் தமிழ்நாடக அரங்கு இவை போன்ற பல நாடக ஆய்வு நூல்களை எழுதினார்.
- "அரங்க ஆய்வுகூடம்" என்பதை நிறுவிக் கூத்தில் புதிய பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டவர்.
உதாரணம் : காண்டவதகனம்

**(04 புள்ளிகள்)**

(ii) குழந்தை ம. சண்முகலிங்கம்

- மரபையும் நவீனத்துவத்தையும் கையாண்டு மாற்று அரங்கு ஒன்றினைத் தோற்றுவித்தவர்.
உதாரணம் - மண்சுமந்த மேனியர்
- சிறுவர் நாடகம் மூலம் ஈழத்தமிழ் அரங்கிற்குத் தன்னை அறிமுகம் செய்தவர்.
உதாரணம் - கூடிவிளையாடு பாப்பா
- 1978இல் நாடக அரங்கக் கல்லூரியை நிறுவிக் காத்திரமான நாடகச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருபவர்
- இவரது நாடகங்களைப் பின்வருமாறு நோக்க முடியும்

1. யதார்த்த நாடகங்கள் - எந்தையும் தாயும், உறவுகள்.....
2. சிறுவர் நாடகங்கள் - முயலார் முயல்கிறார், கூடிவிளையாடு பாப்பா.....
3. மொழிபெயர்ப்பு நாடகங்கள் - ஈடிப்பஸ், ஒருபாவையின் வீடு......
4. பாடசாலை நாடகங்கள் - ஆரொடு நோகேன், தாயுமாய் நாயுமானார்.......
5. நிருத்திய நாடகங்கள் - ஆர்கொலோ சதுரர், அளப்பருங்கருணை.....
6. இசைநாடகம் - கண்டனன் சீதையை
7. கூத்துருவாக்க நாடகங்கள் - எதிர்கொள்ளக் காத்திருத்தல், அயலவன் யார்.....

**(04 புள்ளிகள்)**

(iii) க. சிதம்பரநாதன்

- 1980களில் குழந்தை.ம.சண்முகலிங்கத்தின் மண்சுமந்த மேனியர் நாடகத்தை நெறியாள்கை செய்ததன் ஊடாக ஈழத்தமிழ் அரங்கில் தன்னை ஒரு சிறந்த நெறியாளராக இனங்காட்டியவர்.

- சமூக மாற்றத்திற்கான சாதனமாக அரங்கு திகழவேண்டும் எனக்கூறி இதற்காக கண்ணுக்குப் புலனாகா அரங்கு, படிம அரங்கு, பங்குகொள்ளல் அரங்கு, உளச்சிகிச்சை அரங்கு, தெருவெளி அரங்கு போன்றவற்றினை ஈழத்தமிழ் அரங்கில் அறிமுகம் செய்தார்.

- அரசியல் அரங்கின் அவசியத்தினை நடைமுறைப்படுத்தினார்.

- 1970களில் ஊர் அரங்கச் செயற்பாடுகளில் நடிகராக ஆரம்பித்து சி.மௌனகுருவின் நாடகங்களில் நடிகராக அறிமுகமானார். பின்னர் 80களில் பாடசாலை நாடகங்கள் குறிப்பாக சிறுவர் நாடகங்களில் நெறியாளராகப் பணியினைத் தொடர்ந்தார்.

- இவரது அரங்கச் செயற்பாடுகளும் நெறியாள்கை செய்யப்பட்ட நாடகங்களும்

  1. சிறுவர் அரங்கு - கூடிவிளையாடு பாப்பா.....
  2. பாடசாலை நாடகங்கள் - சத்திய சோதனை, எங்கள் தவப்பயன்.....
  3. தெருவெளி அரங்கு – மாயமான், மானுடம் சுடரும் ஒரு விடுதலை.....
  4. அரசியல் அரங்கு – மண் சுமந்த மேனியர், உயிர்த்த மனிதரின் கூத்து, பொய்க்கால், நாமிருக்கும் நாடு நமது
  5. மொழிபெயர்ப்பு நாடகம் - செவ்விளக்கு
  6. களப்பயிற்சியூடான நாடகம் - மாற்றம்
  7. அரங்கச் செயற்பாட்டுக் குழுவை உருவாக்கியதோடு பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்கமைத்து வருகிறார்.
     (நாடகப் பட்டறைகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள், கதையாடல்கள், நாட்டுப்புறக் கலைப் பயில்வு)
  8. "சமூக மாற்றத்திற்கான அரங்கு" எனும் அரங்கியல் ஆய்வு நூலை வெளியிட்டார்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

6. (i) ஆரொடுநோகேன் நாடகத்தில் வரும் 'சுபத்திரா' மற்றும் புதியதொரு வீடு நாடகத்தில் வரும் 'மாசிலன்' ஆகிய பாத்திரங்களின் பாத்திரச் சித்திரிப்புப் பற்றி விளக்குக.

**சுபத்திரா**

- பிள்ளைமீது அதிக பாசம் கொண்ட பாத்திரம்
- அன்பாகப் பழகும் பாத்திரம்
- அப்பாவித்தனமான பாத்திரம்
- பிள்ளைகளின் ஆளுமை, கட்டிளமைப் பிள்ளைகளின் உணர்வு, எதிர்பார்ப்பு என்பவற்றை அறியாத பாத்திரம்
- கற்பனை உலகில் சஞ்சரிக்கும் பாத்திரம்
- பிள்ளையைச் சுற்றி கனவுலகில் மிதப்பவர்

**மாசிலன்** **(02 புள்ளிகள்)**

- துடிப்பான இளைஞன், அண்ணனுக்கு உதவும் பாத்திரம்.
- மிகபபொறுப்பாக குடும்ப, சமூக வேலைகளில் ஈடுபடும் பாத்திரம்.
- ஊரவரின் வற்புறுத்தலுக்காக அண்ணியை மணம் செய்யும் பாத்திரம்.
- அண்ணன் மீளவந்தபோது செய்வதறியாது தவிக்கும் பாத்திரம்.
- சமூக நியமங்களைத் தகர்க்கும் ஆளுமைமிக்க பாத்திரம்.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(ii) மேற்குறிப்பிட்ட இரண்டு நாடகங்களிலும் காணப்படும் பிரதான கருக்களை இனங்கண்டு எழுதுக.

கரு

**புதியதொரு வீடு -** எத்தனை துயர் வந்தபோதும் சோர்ந்துவிடாது அதனைச் சவாலாக ஏற்றுத் துணிவோடு முன்னேற வேண்டும் என்பதாகும்.

**(02 புள்ளிகள்)**

**ஆரொடு நோகேன் -** தம் பிள்ளைகளின்பாற் கொண்டுள்ள அன்பு, கல்வி என்பன நிமித்தமாகப் பெற்றோர் தம்மை அறியாது தாமும் வருந்திப் பிள்ளைகளையும் வருத்தும் நிலை.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(iii) ஆரொடுநோகேன் நாடகத்தை படச்சட்ட மேடையில் ஆற்றுகை செய்யும்போது நாடக இறுதிக் காட்சிக்குரிய காட்சிவிதானிப்பை எவ்வாறு திட்டமிடுவீர் என்பதை விவரிக்குக.

படச்சட்ட அரங்கினை மனதிற்கொண்டு - கனவு நாடகம்
ரஞ்சித்குமார், சுபத்திரா திருமண நாள் காட்சிக்கேற்ப மாணவர்கள் காட்சி விதானிப்பினை மேற்கொள்ளும் விதத்தினை செய்முறை அனுபவ ரீதியாக விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

7. பின்வருவனவற்றுள் யாதாயினும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) குளுர்த்தி

- இந்துப் பண்பாட்டில் அம்மன் ஆலயங்களில் குறிப்பாக, கண்ணகி அம்மன் ஆலயங்களில் நிகழ்த்தப்படும்.
- இச்சடங்கு பெரும்பாலும் வைகாசி மாதத்தில் நடைபெறும்.
- அம்மனைக் குளிர்வித்தல் என்பது இதன் கருத்தாகும்.
- மழை வேண்டுதல், நோய் தீர்த்தல், ஊர் நன்மை என்பவற்றிற்காக நிகழ்த்தப்படும்.
- ஒவ்வொரு பிரதேசத்திலும் இதன் ஆற்றுகை முறை வேறுபடும்.
- பொதுவாக, அம்மனுக்கு பால், தயிர், கொண்டு அபிசேகம் செய்தல், பொங்கல் படைத்தல், உடுக்கடித்துப் பாடுதல், கலையாடுதல், பாணக்கம் வழங்குதல் போன்றன இடம்பெறும்

**(இவற்றை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதியிருப்பின் புள்ளி வழங்கலாம்)**

**(04புள்ளிகள்)**

(ii) உடற்தளர்வுப் பயிற்சி

- நடிகனது உடலை நடிப்பதற்கேற்றவாறு தளர்வடையச்செய்யும் பயிற்சி இதுவாகும்.
- நடிகனது உடலின் உள்ளார்ந்த லயத்தைக் கண்டுபிடிக்கவும் பிற நடிகர் மீது நம்பிக்கை வைக்கவும் உடலை உணர்வுகளின் தொகுதியாக வெளிப்படுத்தவும் உதவும்.
- இதன் மூலம் சிறந்த ஊமச் சித்திரிப்பையும் மேடை அசைவியக்கத்தையும் வெளிப்படுத்த முடியும்.
- உள்ளத்தில் நினைப்பதைத் தனது உடலால் செய்து காட்டுவதற்கும் இது உதவும்.

**(04புள்ளிகள்)**

(iii) தென்பாங்கு

- மன்னாருக்குரிய தனித்துவமான கூத்துமரபு.
- மாதோட்டப் பாங்கு என்றும் அழைக்கப்படுகின்றது.
- நிறுதிட்டமான ஆடல் மரபுகளைக் கொண்டது.
- தனித்துவமான தெம்மாங்குப் பண்புடைய இசை மரபு காணப்பெறும்.
- கிறிஸ்தவக்கதைகள் மட்டுமன்றி இராமாயணக் கதைகள், மகாபாரதக்கதைகள் என்பனவும் எழுதப்பட்டுள்ளன.
- காப்பு விருத்தமாகப் பாடப்படும்.
- டோலக், மிருதங்கம், ஹார்மோனியம் ஆகிய இசைக்கருவிகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

**(04புள்ளிகள்)**



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

(iv) பொட்டொளி



- அரங்கில் குறித்த பாத்திரத்தை / பொருளை விசேடமாகச் சுட்டிக்காட்டப் பயன்படுகின்றது.
- புள்ளிக்குவியமுடைய விளக்கு எனவும் இது அழைக்கப்படுகின்றது.
- மேடையின் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு பகுதிக்கு மட்டும் ஒளி பாய்ச்சப் பயன்படும்.
- இது இரண்டு வகைப்படும்
  1. அசையும் பொட்டொளி
  2. அசையாப் பொட்டொளி / நிலையான பொட்டொளி
- குறித்த இடத்தில் கூர்மையான, தெளிவான, குவிவான ஒளியைப் பாய்ச்சுவதற்கு அசையாப் பொட்டொளி பயன்படும்.
- அசையும் பொட்டொளியானது மேடையில் நடைபெறும் இயக்கங்களைத் தொடர்ந்து காட்டுவதற்குப் பயன்படும்.

**(04புள்ளிகள்)**

(v) நாடக நயப்பும் நாடக விமர்சனமும்

- ஒரு நாடகத்தினை முழுமையாகப் பார்த்து உணர்வு ரீதியாக, அழகியல் ரீதியாக அப்படைப்பினை அனுபவிப்பதே நாடக நயப்பு ஆகும்.
- இது படைப்பு மீதான மனப் பதிவு சார்ந்த அனுபவமாகும்.
- தாம் நயந்தவற்றைப் பகுப்பாய்வு செய்து படைப்புச் செயன்முறையின் நிறை குறைகள், நாடக உத்திகள் மற்றும் படைப்பாக்கத்திறன் என்பவற்றை முன் வைப்பது நாடக விமர்சனம் ஆகும்.

- பார்ப்போர் நிலையில் இருந்து படைப்பை விமர்சிப்பது எனலாம்.

" குணம் நாடிக் குற்றமும் நாடி
அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" - திருக்குறள்

**(04புள்ளிகள்)**

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]



LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්
PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න